**அக்டோபர் – 05**

# TNPSC துளிகள்

- மனிதத் தலையீடு இன்றி, சீனாவில் உள்ள ஒரு நீச்சல் குளத்தில் 500 மீட்டர் தொலைவிற்கு 116 TH-618 தன்னிசையாக நீருக்கடியில் செல்லும் வாகனங்களை (AUVs) 34 நிமிடங்களுக்கு இயக்கி, சீனக் குழு ஒன்று கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது.
- ஜப்பானின் ஐச்சி-நகோயாவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், மகளிர் ரிகர்வ் வில்வித்தை அணிப் பிரிவில் இந்தியா தனது முதல் ஆசிய விளையாட்டு தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.
- பீகாரின் வால்மீகி புலிகள் காப்பகத்திலிருந்து 3 வயதுடைய ராயல் வங்காள பெண் புலி ஒன்று இடமாற்றம் செய்யப்பட்டு, மேற்கு வங்கத்தின் அலிபுர்துவாரில் உள்ள பக்ஸா புலிகள் காப்பகத்தில் விடுவிக்கப்பட்டது; இது அந்த மாநிலத்தின் முதல் புலிகள் மறு அறிமுகத் திட்டத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- தஜிகிஸ்தானில் உள்ள ரோகுன் நீர்மின் திட்டம் அதன் திட்டமிடப்பட்ட உயரமான 335 மீட்டரை நெருங்கி வருகிறது; இது கட்டி முடிக்கப்பட்ட பிறகு உலகின் மிக உயரமான அணையாக மாறும்.
    - அமு தர்யா நதி அமைப்பின் முக்கிய துணை நதியான வக்ஷ் நதியின் குறுக்கே இந்த அணை கட்டப்பட்டு வருகிறது.
- அக்னிவீரர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கான சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தால் (DGCA) சான்றளிக்கப்பட்ட ஆளில்லா விமான பைலட் பயிற்சித் திட்டத்தை உருவாக்குவதற்காக, தமிழ்நாடு ஆளில்லா விமானக் கழகத்துடன் (TNUAVC) ஜுப்பா ஜியோ நேவிகேஷன் டெக்னாலஜிஸ் (Zuppa Geo Navigation Technologies) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற தனது DevDay 2026-வது மாநாட்டில், OpenAI நிறுவனம் GPT-6.1 Sol மற்றும் Dots AI முகவர்களை (AI agents) அறிமுகப்படுத்தியது.
- ஸ்பேஸ்எக்ஸ் (SpaceX) நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் விண்கலம் முதல் முறையாக பூமியின் சுற்றுப்பாதையை அடைந்ததுடன், தனது சோதனைப் பயணத்தின் போது 26 ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள்களை நிலைநிறுத்தியுள்ளது.
- தேசிய குவாண்டம் திட்டத்தின் எட்டு ஆண்டு இலக்கில் பாதிக்கும் மேலானதை மூன்று ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில் எட்டியுள்ளதைக் குறிக்கும் வகையில் இந்திய குவாண்டம்-பாதுகாப்பான தகவல் தொடர்பில் 1,000 கிலோமீட்டர் மைல்கல்லைத் தாண்டியுள்ளது.
    - தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவது மற்றும் இந்தியாவின் குவாண்டம் தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- துறைகள் தொடர்பான 24 நாடாளுமன்ற நிலைக்குழுக்களில் ஆறு குழுக்களுக்கு புதிய தலைவர்கள் நியமிக்கப்பட உள்ளனர், இதில் திரிணாமுல் காங்கிரஸ் (TMC) தனது இரண்டு பதவிகளை இழந்துள்ளது.
    - பாஜக நாடாளுமன்ற உறுப்பினர்களான சுதான்ஷு திரிவேதி, சுஜித் குமார், சஷாங்க் மணி மற்றும் சுதிர் குப்தா ஆகியோர் முறையே வர்த்தகம், பணியாளர், தொழிலாளர் மற்றும் ரயில்வே குழுக்களுக்கு தலைமை தாங்குவார்கள். மேலும் ககோலி கோஷ் தஸ்திதார் மற்றும் முகுல் வாஸ்னிக் ஆகியோர் ரசாயனம் மற்றும் கல்விக் குழுக்களுக்கு தலைமை தாங்குவார்கள்.

- ஜப்பானின் ஐச்சி-நகோயாவில் உள்ள நகோயா நகர மிசுஹோ பூங்கா தடகள மைதானத்தில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், மகளிர் 4×400 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியில் இந்தியா தனது முதல் தடகள தங்கப் பதக்கத்தை வென்றது.
- நதிகள் பாதுகாப்பை மேம்படுத்தவும், நன்னீர் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கவும், நதிகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், செப்டம்பர் மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமையான 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 அன்று உலக நதிகள் தினம் அனுசரிக்கப்படும்.
- விலங்கு நலன், பாதுகாப்பு மற்றும் விலங்குகளை கருணையுடன் நடத்துவதை மேம்படுத்துவதற்காக ஆண்டுதோறும் அக்டோபர் 4 அன்று உலக விலங்குகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு “See the World Through Their Eyes” என்பதாகும்.

# தேசியச் செய்திகள்

## செம்மொழிகளுக்கான சிறப்பு மையங்கள்




- அசாமி, பெங்காலி, மராத்தி, பாலி மற்றும் பிராகிருதம் ஆகிய செம்மொழிகளுக்கான ஐந்து சிறப்பு மையங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மையங்கள் மொழியியல் மற்றும் இலக்கிய மரபுகளின் மேம்பட்ட ஆராய்ச்சி, பாதுகாப்பு, ஆவணப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றுக்கு ஆதரவு அளிக்கும்.
- செம்மொழிகளான அசாமி மொழிக்கான மையம் அசாமின் தேஜ்பூர் பல்கலைக் கழகத்திலும், பெங்காலி மொழிக்கான மையம் மேற்கு வங்கத்தின் விஸ்வ-பாரதி பல்கலைக் கழகத்திலும், மராத்தி மொழிக்கான மையம் மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள டெக்கான் கல்லூரியிலும் அமைக்கப்படும்.
- செம்மொழிகளான பாலி மொழிக்கான மையம் ஒடிசா மத்திய பல்கலைக் கழகத்திலும், பிராகிருத மொழிக்கான மையம் குஜராத் மத்திய பல்கலைக் கழகத்திலும் அமைக்கப்படும்.
- இந்தியாவில் மொத்தம் 11 மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு மொழி 1,500 முதல் 2,000 ஆண்டுகள் பழமையான பதிவு செய்யப்பட்ட வரலாறு,

வளமான பழங்கால இலக்கியங்கள், அசல் இலக்கிய மரபு மற்றும் அதன் பிந்தைய அல்லது நவீன வடிவங்களிலிருந்து வேறுபட்ட செம்மொழி வடிவத்தைக் கொண்டு இருந்தால் அது செம்மொழியாக அங்கீகரிக்கப்படுகிறது.

## இந்தியாவில் சுகாதாரப் போக்குகள்




- உலக சுகாதார அமைப்பின் (WHO) மதிப்பீடுகளின்படி, 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் பிறப்புக்கால வாழ்நாள் எதிர்பார்ப்பு 71 ஆண்டுகளை எட்டியுள்ளது, இது பாகிஸ்தானின் 68.2 ஆண்டுகளை விட அதிகம், ஆனால் வங்கதேசத்தின் 72.7 ஆண்டுகளை விடக் குறைவு.
- இந்தியாவின் வாழ்நாள் எதிர்பார்ப்பு 2019 ஆம் ஆண்டில் 70.5 ஆண்டுகளில் இருந்து 2021 ஆம் ஆண்டில் 68.1 ஆண்டுகளாகக் குறைந்து, பின்னர் 2023 ஆம் ஆண்டில் 71 ஆண்டுகளாக மீண்டுள்ளது.
- இந்தியாவின் ஆரோக்கியமான வாழ்நாள் எதிர்பார்ப்பு 2023 ஆம் ஆண்டில் 60.6 ஆண்டுகளாக இருந்தது, இது 2021 ஆம் ஆண்டில் 58.4 ஆண்டுகளாகவும், 2019 ஆம் ஆண்டில் 60.5 ஆண்டுகளாகவும் இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில் 60 வயதில் உள்ள இந்தியர்கள் மேலும் 18.8 ஆண்டுகள் வாழ்வார்கள் என எதிர்பார்க்கலாம், இதில் 13.7 ஆரோக்கியமான ஆண்டுகளும் அடங்கும்.
- இந்தியாவின் நோய் முறைமை மாறி வருவதுடன் 2000 ஆம் ஆண்டில் முதல் 10 இறப்புக்கான காரணங்களில் தொற்றும் நோய்கள் சுமார் 62 சதவீதமாக இருந்த நிலையில், 2023 ஆம் ஆண்டில் தொற்றா நோய்கள் (NCDs) சுமார் 75 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் இறப்புக்கான முக்கிய காரணங்களாக இஸ்கிமிக் இதய நோய் (ischaemic heart disease), நாள்பட்ட தடுப்பு நுரையீரல் நோய் (COPD), பக்கவாதம் மற்றும் நீரிழிவு நோய் ஆகியவை உள்ளன. அதேவேளையில் காசநோய் மற்றும் வயிற்றுப்போக்கு நோய்கள் முதல் 10 காரணங்களுக்குள் தொடர்ந்து உள்ளன.
- உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய சுகாதார மதிப்பீடுகள் 2000 முதல் 2023 ஆம்

ஆண்டு வரையிலான வாழ்நாள் எதிர்பார்ப்பு, ஆரோக்கியமான வாழ்நாள் எதிர்பார்ப்பு, இறப்புக்கான காரணங்கள் மற்றும் நோய் சுமை ஆகியவற்றை உள்ளடக்கியது; 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய வாழ்நாள் எதிர்பார்ப்பு 73.3 ஆண்டுகளை எட்டியுள்ளது.

## PM-DHARA திட்டம் – பசுமை ஆற்றல் பரிமாற்றம்

- மாநிலத்திற்கு இடையேயான மின் பரிமாற்ற அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக PM-DHARA (பிரதான் மந்திரி இணக்கமான மற்றும் விரைவுபடுத்தப்பட்ட புதுப்பிக்கத் தக்க ஆற்றல் அணுகலை உருவாக்குதல்) திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 2032–33 ஆம் நிதியாண்டிற்குள் 135 ஜிகாவாட் (GW) அளவிலான புதுப்பிக்கத்தக்க ஆற்றலை மின் கட்டமைப்புடன் இணைத்து பரிமாற்றம் செய்வதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாநிலத்திற்கு உள்ளேயான மின் பரிமாற்றக் கட்டணங்களை ஈடுசெய்யவும், மின்சாரக் கட்டணங்களைக் குறைவாக வைத்திருக்கவும் இத்திட்டத்திற்கு மத்திய அரசின் நிதி ஆதரவாக ₹54,082 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- மின்கட்டமைப்பின் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்தவும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை நிர்வகிக்கவும் 50 GWh திறன் கொண்ட மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகள் (BESS) நிறுவப்படும்.
- 2035 ஆம் ஆண்டிற்குள் 900 GW புதைபடிவமற்ற ஆற்றல் திறனை நிறுவுவதை இலக்காகக் கொண்டு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஒருங்கிணைப்பு, ஆற்றல் சேமிப்பு, ஆற்றல் பாதுகாப்பு மற்றும் இந்தியாவின் கார்பன் உமிழ்வைக் குறைத்தல் ஆகியவற்றுக்கு PM-தாரா திட்டம் ஆதரவளிக்கிறது.




## UPSC 100 ஆண்டுகள் நிறைவு

- மத்தியப் பணியாளர் தேர்வாணையம் ஆனது (UPSC) 1926 ஆம் ஆண்டு நிறுவப் பட்டதிலிருந்து அதன் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில், 2026 ஆம் ஆண்டு

அக்டோபர் 1 அன்று 100 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

- ❖ முதல் அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆனது 1926 ஆம் ஆண்டு அக்டோபர் 1 அன்று சர் ராஸ் பார்கர் என்பவரைத் தலைவராகக் கொண்டு நிறுவப்பட்டது.
- ❖ 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம், இதனை கூட்டாட்சி அரசுப் பணியாளர் தேர்வாணையமாக (FPSC) மறுசீரமைத்தது.
- ❖ இந்திய அரசியலமைப்பு (1950), சரத்துகள் 315 முதல் 323 ஆகியவற்றின் கீழ் UPSC-க்கு அரசியலமைப்பு அந்தஸ்தை வழங்கியது, அத்துடன் சரத்து 320 அதன் முக்கிய செயல்பாடுகளை வரையறுக்கிறது.
- ❖ இந்திய ஆட்சிப் பணி (IAS), இந்தியக் காவல் பணி (IPS) மற்றும் இந்திய வனப் பணி (IFoS) உள்ளிட்ட பணிகளுக்கான குடிமைப் பணித் தேர்வுகளை (CSE) UPSC நடத்துகிறது.




## சர்வதேசச் செய்திகள்

### தான்சானியாவில் IPU சபை




- ❖ மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ், தான்சானியாவின் அருஷாவில் நடைபெறும் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் (IPU) 153 வது சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் இந்திய நாடாளுமன்றக் குழுவிற்குத் தலைமை தாங்குகிறார்.

- தேசிய நாடாளுமன்றங்களின் உலகளாவிய அமைப்பான சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியம் (IPU) 1889 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது மற்றும் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.
- நாடுகளுக்கிடையே நாடாளுமன்ற உரையாடல், ஜனநாயகம், அமைதி, மனித உரிமைகள் மற்றும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்த IPU செயல்படுகிறது.
- இச்சபைக் கூட்டத்தின் கருத்துரு "அனைவருக்குமான உள்ளடக்கம், நம்பிக்கை மற்றும் வாய்ப்புகள் மூலம் நல்லாட்சியை மேம்படுத்துதல் மற்றும் சமூகங்களுக்கு அதிகாரமளித்தல்" என்பதாகும்.
- ஜனநாயகம், மனித உரிமைகள், அமைதி மற்றும் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு (AI), சுகாதாரம், பருவநிலை மாற்றம் மற்றும் பெண்களின் பங்கேற்பு ஆகியவை குறித்து விவாதங்கள் நடைபெறும்.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### இரண்டாவது சிங்கங்களின் வாழ்விடம் – பர்தா




- வன நிர்வாகத்தை வலுப்படுத்தவும், குஜராத்தின் பர்தாவை ஆசிய சிங்கங்களுக்கான இரண்டாவது வாழ்விடமாக மேம்படுத்தவும், போர்பந்தர் வனக்கோட்டத்தை குஜராத் மாநிலம் மறுசீரமைத்துள்ளது.
- 143 ஆண்டுகளுக்குப் பிறகு ஆசிய சிங்கங்கள் இயற்கையாகவே பர்தாவிற்குத் திரும்பியதைத் தொடர்ந்து இந்த மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.
- குஜராத்தின் 2026 ஆம் ஆண்டு சிங்கங்கள் கணக்கெடுப்பில் 891 ஆசிய சிங்கங்கள் பதிவாகியுள்ளன, இது 2020 ஆம் ஆண்டில் 674 ஆக இருந்தது.
- பர்தா குஜராத்தின் சௌராஷ்டிரா பகுதியில் அமைந்துள்ளது மற்றும் இது கிர் நிலப் பரப்பைத் தாண்டி ஒரு மாற்று வாழ்விடத்தை வழங்கும்.
- குஜராத்தில் உள்ள கிர் நிலப்பரப்பு ஆசிய சிங்கங்களின் முதல் மற்றும் முக்கிய இயற்கை வாழ்விடமாகும்.

- ஆசிய சிங்கம் சர்வதேச இயற்கை பாதுகாப்பு சங்கத்தால் (IUCN) அருகி வரும் இனமாக (Endangered) வகைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் இயற்கையாகவே குஜராத்தில் மட்டுமே காணப் படுகிறது.

# முக்கிய தினங்கள்

## உலக வெறிநாய்க் கடிநோய் விழிப்புணர்வு தினம் 2026 - செப்டம்பர் 28

- வெறிநாய்க் கடி நோயைத் தடுப்பது மற்றும் ஒழிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Stronger Together என்பதாகும்.
- வெறிநாய்க் கடி நோய் என்பது ஒவ்வொரு ஆண்டும் சுமார் 59,000 பேரைக் கொல்லும் ஒரு கொடிய விலங்குவழியாகப் (zoonotic) பரவக்கூடிய நோயாகும்.
- அறிகுறிகள் தோன்றியவுடன், வெறிநாய்க் கடி நோய் கிட்டத்தட்ட 100 சதவீத இறப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது.
- வெறிநாய்க் கடி நோய் கட்டுப்பாட்டிற்கான உலகளாவிய கூட்டணியின் (GARC) ஆதரவுடன் 2007 ஆம் ஆண்டு முதல் இந்த தினம் உலகளவில் குறிக்கப்பட்டு வருகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★